**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**
**அ.வ.எண்.438/2022**

**தேதி : 03.11.2025**
**(வா.சா.2 ) – திரு. காளியம்மாள்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**
**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதிகள் தரப்பில்)**

1. வழக்குச் சொத்து எங்களுடைய பூர்வீகச் சொத்து என்றால் சரிதான். வழக்குச்சொத்தும் இதர சொத்துக்களும் நாச்சிமுத்துக்கவுண்டர் மற்றும் பழனியப்பகவுண்டருக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவர்கள் 1956ல் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகவிஸ்தியில் ஏ பாகமாகக் கிடைத்த சொத்துதான் என்னுடைய பாட்டனார் நாச்சிமுத்து, அவருடைய மக்கள் சின்ன பழனிச்சாமி, பெரிய பழனிச்சாமி மற்றும் பெரியசாமி ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்தை 1994ல் மேற்படி சின்னப்பழனிச்சாமி, பெரியபழனிச்சாமி, பெரியசாமி ஆகியோர் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரித்த காலம் முதல் அவரவர் சொத்தை அவரவர் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. நான் பெரிய பழனிச்சாமியின் பெரிய மகள். என்னுடன் பிறந்தவர்கள் நாச்சிமுத்து மற்றும் ராஜேஸ்வரி என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் இறந்து சுமார் 10 வருடம் இருக்கும். என்னுடைய தாயார் என் தந்தை இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். 2013ல் அ.வ.எண்.121/2013 வழக்கை நான் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்தேன் என்றும், அதில் என் தகப்பனாருக்கு 1994ம் ஆண்டு பாகவிஸ்தியில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் என்னுடைய பாகத்தைக் கோரியிருந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் பாகப்பிரிவினை தீர்ப்பாணை பெறுவதற்கு முன்பாகவே என்னுடைய சகோதரர் நாச்சிமுத்து மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர் அவர்களது பாகத்தை குப்புலட்சுமி என்பவருக்கு கிரையம் செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

3. மேற்படி குப்புலட்சுமி 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். குப்புலட்சுமி அவ்வாறான கிரையத்தை கொடுத்தது எனக்கு தெரியும். அதன்பிறகுதான் இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளோம். எந்தெந்த சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை விற்பனை செய்துள்ளோம் என்றால் சர்வே எண்.112/3 மற்றும் 112/2 தவிர மீத சொத்துக்களை விற்றுவிட்டோம். தொப்பம்பட்டியைச் சேர்ந்த செல்வராஜ் என்பவருக்கு 14.09.2022 அன்று நாங்கள் கிரையம் செய்துகொடுத்துவிட்டோம். வழக்குச் சொத்தைத்தவிர மீத சொத்துக்களை நாங்கள் கிரையம் கொடுத்துள்ளோம் என்றும், என்னுடைய சகோதரர் நாச்சிமுத்து இறந்துவிட்டதால் நானும் என்னுடைய சகோதரி ராஜேஸ்வரியும் எங்கள் வாரிசுகளும் சேர்ந்து கிரையம் செய்துகொடுத்துவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி கிரையப்பத்திரத்தில் செல்வராஜுக்கு கிரையம் கொடுத்த சொத்துக்கள் என்னுடைய தகப்பனாருக்கு 1994ம் வருடத்திய பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்று தெரிவித்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் கொடுத்த சொத்துக்களை நானும் என்னுடைய சகோதரரும், சகோதரியும் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மூவரும் சேர்ந்து சொத்தை விற்றுவிடலாம் என்றும், பாகம் பிரிக்கவேண்டாம் என்றும் என்னுடைய தம்பி மற்றும் தங்கை சொன்னதால் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டேனா என்றால் ஆம். மேற்படி விபரத்தை நான் நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றும், வழக்கை வாபஸ் பெறுவதாக மட்டுமே தெரிவித்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான்.

5. நான், என் கணவர் மற்றும் என் மக்கள் அனைவரும் ஒன்றாக கண்ணாடிப்புத்தூரில் குடியிருக்கிறோம். அங்கிருந்து நானும் என் கணவரும் வழக்குச் சொத்துக்குச் சென்று விவசாயம் செய்து வருகிறோமா என்றால் ஆம். என் கணவருக்கு எதற்காக சொத்தை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதாலும், எனக்கு கையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதாலும் என்னுடைய கணவருக்கு சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டேன். 14.09.2022 அன்று நான் என் கணவருக்கு சொத்தை எழுதிக்கொடுத்துள்ளேன். நான், என் மகன் பாலசுப்பிரமணி மற்றும் என்னுடைய மற்றொரு மகன் பழனிச்சாமி மற்றும் எனது சகோதரி ராஜேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி மகள் துர்காதேவி ஆகியோர் சேர்ந்து என்னுடைய கணவருக்கு எழுதிக்கொடுத்துள்ளோம்.

6. எவ்வளவு கிரையத் தொகை பெற்றோம் என்றால் நாங்கள் ஐந்து பேரும் சேர்ந்து தலா ரூ.3,00,000/- வீதம் ரூ.15,00,000/- கிரையத் தொகை

பெற்றுக்கொண்டோம். கிரைய ஆவணத்தில் ரூ.1,74,000/- பெற்றுக்கொண்டதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூ.15,00,000/- கையில் வாங்கிக் கொண்டோம். என்னுடைய சகோதரிக்கு ரூ.3,00,000/-மும் அவரது மகளுக்கு ரூ.3,00,000/- மும் என மொத்தம் ரூ.6,00,000 கொடுக்கப்பட்டதா என்றால் ஆம். அவர்கள் எந்தச் சொத்தை விற்றார்கள் என்றால் 7 சென்ட் இடத்தை விற்றார்கள். அந்த 7 சென்டு நிலம் எங்கு உள்ளது என்றால் எங்கள் பூமியை ஒட்டி மேல்புறமாக உள்ளது.

7. 1 ஏக்கர் 06 செண்டை என் கணவருக்கு விற்றுள்ளோம். அந்த 1 ஏக்கர் 06 செண்டில்தான் என்னுடைய சகோதரியின் 7 செண்டு உள்ளதா என்றால் மேற்படி 7 சென்டு எங்கள் மூவருக்கும் பொதுவாக இருந்தது. மேற்படி 7 செண்டு நிலத்திற்கு சர்வே எண், நான்குமால் குறிப்பிடவில்லை என்று சொன்னால் நான் ஆவணத்தை படிக்கவில்லை. கிணற்றுப் பாகம் தற்போதும் பொதுவாகத்தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த கிணறு எங்கள் நிலத்தில் பாதியிலும், அதை ஒட்டி கிழபுறம் பாதியிலும் உள்ளது. மின் கம்பம் எங்கள் நிலத்தில் உள்ளது. அந்த கிணறு ரோட்டை ஒட்டி கிழக்கு கடைசியில் உள்ளது. நானும் குப்புலட்சுமியும் சுமூகமான உறவில் இருக்கிறோமா என்றால் எனக்கு குப்புலட்சுமி என்பவரை யார் என்றே தெரியாது. அவரை எனக்கு அடையாளமே தெரியாது. குப்புலட்சுமி என்னை ஒருநாளும் சந்தித்து பேசியதே கிடையாது.

8. குப்புலட்சுமியின் ஊர் பழனி. நாங்கள் கண்ணாடிப்புத்தூரில் குடியிருக்கிறோம். என் வீட்டிற்கு குப்புலட்சுமி வந்தது இல்லை. பிரதிவாதிகள் என்னிடம் பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று கேட்டார்களா என்றால் இல்லை. தாவாச் சொத்திற்கு கிழக்கோட்டில் உள்ள கிணறுதான் பாசனத்திற்கானது என்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கு வேறு கிணறு எதுவும் பாசனத்திற்குக் கிடையாது. மேற்படி கிணற்றில் எங்களுக்கும், 3,4 பிரதிவாதிகளின் பெரியப்பா மகன் காளியப்பன் என்பவருக்கும் பாத்தியம் உள்ளது. என் கணவர் 2017ல் குப்புலட்சுமியும் நானும் சேர்ந்து பாகம் பிரித்துக்கொண்டதாகவும் சொல்லியிருந்தால் அது எனக்குத் தெரியாது.

9. சொத்துக்களை இதுவரை அளந்து பொலிமால் கல் நடவில்லை என்று சொன்னால் அளந்து கல் நடப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அதிகாரி வந்து அளந்து கல் நட்டார். அவ்வாறு கல் நடும்போது மற்ற பங்காளிகள் உடனில்லை என்று சொன்னால்

பெரியசாமி, தங்கராஜ் ஆகியோர்தான் கல் நட்டார்கள். பெரியசாமி மற்றும் தங்கராஜ்தான் மனு கொடுத்து கிராம நிர்வாக அலுவலரை அழைத்து வந்தார்களா என்றால் அவர்களே மனு கொடுத்து அளந்து கல் நட்டு அவர்கள் பாகத்தை பிரித்து எடுத்துக்கொண்டார்கள். அந்த விபரம் எங்களுக்குத் தெரியாது. பெரியசாமியும், தங்கராஜும் எங்களுக்கு ஒதுக்கிய நிலத்தை நாங்கள் அளந்து பார்த்துவிட்டுத்தான் என் கணவர் பெயருக்கு கிரையம் ஏற்படுத்திக்கொடுத்தோம். நாங்கள் யாரை வைத்து அளந்தோம் என்றால் கிராம நிர்வாக அலுவலரை வைத்து அளந்தோம். அவ்வாறு அளக்கும்போது பெரியசாமி, தங்கராஜ், கோமதி ஆகியோர் உடனில்லை என்றால் சரிதான்.

10. அவ்வாறு அளக்கப்போவது சம்பந்தமாக அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் அறிவிப்பு கொடுத்தாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் என் கணவருக்கு கிரையம் கொடுத்த சொத்து தேவதாகுடிவலசு ஊரை ஒட்டிய நிலம் என்றால் சரிதான். அந்த நிலத்திற்கு என் கணவர் பெயருக்கு இன்னும் பட்டா பெறவில்லை என்றால் சரிதான். என் பெயருக்கும், என் சகோதரி பெயருக்கும் தனியாக பட்டா வழங்கப்படவில்லை. சொத்துக்கள் முழுவதுக்கும் பொதுவாகத்தான் இன்றைய தேதி வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். சொத்து சம்பந்தமாக பெரியசாமியோ, தங்கராஜோ, செல்வியோ இதுவரை என்னிடம் பேசியது கிடையாது. அவர்கள் கிரையம் பெற்றது முதல் இன்றைய தேதி வரை சொத்துக்கள் குறித்து என்னிடம் பேசியது கிடையாது.

11. என்னுடைய கணவர் எதற்காக அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், பிரதிவாதிகள்தான் என் கணவர் மீது முதலில் வழக்கை தாக்கல் செய்தார்கள், அதனால் என் கணவரும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்னுடைய என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் மேற்படி விபரம் என் கணவருக்குத்தான் தெரியும். நான் நல்ல உடல்நிலையுடனும், நல்ல முறையிலும் இருக்கிறேன் என்றும், வழக்குச் சொத்தை விற்க வேண்டிய தேவை இல்லை என்றும், வழக்குச் சொத்து ஊரை ஒட்டியுள்ள மதிப்பு மிக்க நிலம் என்பதால் அதனை அடையவேண்டும் என்பதற்காக எங்களிடம் கிரையம் பெற்றதுபோல் ஆவணத்தை ஏற்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

12. என் தகப்பனார் இறந்த காலம் முதல் அவருக்குப் பாத்தியப்பட்ட சொத்தை நானும், என்னுடைய சகோதரரும், என் சகோதரியும் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை

**என்றும் சொன்னால் சரியல்ல. நான் தொப்பம்பட்டி கிராமம், சர்வே எண்கள் 112/3, 111/1, 111/2, 109/1, 110/1பி, 118/1, 110/2பி, 38/2, 39/1 உள்ள நிலங்களில் பாகம் பிரிக்காத சொத்தை பாகம் பிரித்ததாக ஆவணங்கள் உற்பத்தி செய்து கிரையம் செய்துள்ளதாக சொன்னால் பாகம் பிரிக்காமல் கிரையம் கொடுத்துவிட்டோம். நான் என் கணவர் தாக்கல் செய்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்துள்ள வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை :–</u> இல்லை.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.03 17:31:21 +0530

Additional Sub Judge,
Palani.